අග්‍රාමාත්‍ය කාර්යාලය
பிரதம அமைச்சரின் அலுவலகம்
PRIME MINISTER'S OFFICE

58, ශ්‍රීමත් අර්නස්ට් ද සිල්වා මාවත, කොළඹ 07.
58, ஸ்ரீமத் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, கொழும்பு 07.
58, Sir Ernest de Silva Mawatha, Colombo 07.
Web : www.pmoffice.gov.lk

# கிராமிய சந்தை முறையை நடைமுறைப்படுத்தல்

பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் பொருளாதார அபிவிருத்தி அலுவலகமானது "கிராமிய சந்தை" எனப்படும் இணையதளத்தை தொகுத்து வழங்கியுள்ளது. சிங்கள மொழியில் "பொல" எனவும் தமிழ் மொழியில் "சந்தை" எனவும் அழைக்கப்படுகின்ற சந்தை முறை எனப்படுவது இலங்கையின் கிராமத்துப்புற வாழ்வில் முக்கிய பணியை நிறைவேற்றுகின்ற, வாராந்தம் நடைபெறுகின்ற சந்தையாகும். பொதுமக்கள் ஒவ்வொருவரும் சந்திக்கின்ற இந்த இடம் கிராமியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் செயற்படுகின்றது. கிராமிய சந்தைகளில் குறிப்பிடத்தக்க அளவு சில்லறை வியாபாரமும் நடைபெறுகின்றது. பிரதான உற்பத்தியாளர்களின் விற்பனை மற்றும் உள்ளூர் அல்லாத பொருட்களை வாங்குதல் என்பன விநியோகஸ்தர்கள் மூலம் கொண்டு வரப்படுகிறது. கிராமிய சந்தைகளை நவீனமயப்படுத்துவதற்கும் அவற்றின் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு வழங்கி நாடு பூராவும் அமைந்துள்ள கிராமிய பொருளாதாரத்துக்கு ஊக்கம் அளிப்பதற்கு இது வழிவகுக்கும்.

இந்த **(http://villagefair.pmoffice.gov.lk)** வெப் தளத்தின் ஊடாக இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கான பங்களிப்பை வழங்குவதற்கு விருப்பத்தைக் கொண்டுள்ளவர்களுடன் இணைந்து விசேடமாக நாடு பூராவும் பரந்து காணப்படுகின்ற கிராமப்புற மக்களையும் உள்ளடக்கி தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பிலான தேவைப்பாடுகள் உள்ள கிராமிய சந்தைகளை சம்பந்தப்படுத்தக்கூடியதான பொறிமுறையொன்று வகுக்கப்படும். இந்த பூர்வாங்க வேலை எனப்படுவது உதவி வழங்கும் நிறுவனங்களில் அனேகமானோரின் வாழ்வில் பாரிய தாக்கத்தைச் செலுத்தக்கூடிய இலங்கையின் நுண் கருத்திட்டத்திற்கான நிதியத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கான பணியை இலகுபடுத்தும் நோக்கில் எடுக்கப்படும் விடயமொன்றாகும்.

நவீனமயப்படுத்தப்பட்ட அந்தந்த கிராமிய சந்தைகளுக்குத் தேவையானவைகள் பட்டியல்படுத்தப்படும். நிதி உதவிகள் பெறுகின்ற கிராமியச் சந்தைகள் அந்தந்த நுண் கருத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு கட்டுப்பட்டுள்ளனர். பரந்த வெளிப்படைத்தன்மையுடனான முடிவுறுத்தப்பட்ட நுண் கருத்திட்டங்களின் புகைப்படம் வெப்தளத்தில் பதிவேற்றம் (upload) செய்யப்படும். இதுவரை மாத்தளை மற்றும் கொழும்பு தொடர்பான சந்தை விபரங்களை பார்க்க முடியும். மேலும் பொது மக்கள் இணையத்தின் மூலம் முன்னேற்ற அறிக்கையை மேம்படுத்தலாம். பின்னூட்டங்கள் மற்றும் புத்தாக்க கருத்துக்களை இணையதளம் மூலம் **(weeklyvillagefair@gmail.com)** எழுத முடியும்.

03/04

දුරකථන / தொலைபேசி / Telephones: 2575317 - 18, 2370737 - 38
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 2575454, 2575310, 2574713
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / E-mail: secpm@pmoffice.gov.lk, Info@pmoffice.gov.lk